## மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நல்ல நண்பர்களாக

# சுயமரியாதை உணர்வோடு வாழ வாழ்த்துகிறேன்!

## சென்னை – பல்லாவரத்தில் திருவாரூர் கண்ணன் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, ஜூலை 7 -**

**சென்னை பல்லாவரத்தில் நடைபெற்ற திருவாரூர் கண்ணன் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நல்ல நண்பர்களாக சுயமரியாதையோடு வாழ வாழ்த்துகிறேன்." என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசியதாவது:-

திருவாரூர் கண்ணன் மாமா - வள்ளி அத்தை அவர்களுடைய பேத்தியும், என்னுடைய அருமை நண்பர் தம்பிதுரை - ஆனந்தவள்ளி அவர்களின் அன்பு மகளுமான கண்மணி மற்றும் வேலூரைச் சேர்ந்த ஶ்ரீனிவாசன், பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புமகன் ஶ்ரீமாதேஸ்வரன் ஆகியோருடைய திருமணத்தை இங்கே நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

திருமண வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கக் கூடிய மணமக்களுக்கு முதலில் அத்தனை பேரின் சார்பாக என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருமணத்தை நம் கழகத் தலைவர் அவர்கள் நடத்தி வைப்பதாக இருந்தது. தலைவரின் சார்பாக இன்றைக்கு இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். இந்தத் திருமணம் எங்களுடைய இல்லத் திருமணம், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், கலைஞருடைய குடும்பத் திருமணம் என்கின்ற உரிமையோடு, அன்போடு இங்கே கலந்துகொள்ள வந்திருக்கிறேன்.

### திருக்குவளை பந்தம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குடும்பத்துக்கும் நம் கண்ணன் மாமா அவர்களின் குடும்பத்திற்குமான பந்தம், இன்றைக்கு நேற்றைக்கு உருவான பந்தம் கிடையாது. இது திருக்குவளையில் உருவாகிய பந்தம். திருக்குவளையில் கலைஞர் அவர்களின் பக்கத்து வீட்டில்தான் கண்ணன் மாமாவின் அப்பா, மறைந்த பெரியவர் சண்முகம் தாத்தா அவர்கள் இருந்தார்கள். அவர் வீடு அங்கேதான் இருந்தது.

### அத்தான் தாத்தா'

பெரியவர் சண்முகம் தாத்தா அவர்களை நாங்கள் அத்தனைபேரும், எங்களுடைய குடும்பத்தில் இருக்கிறவர்கள் அத்தனைபேரும் அத்தான் தாத்தா, அத்தான் தாத்தா என்றுதான் கூப்பிடுவோம். அதற்கு என்ன காரணம் என்றால், கலைஞர் அவர்களுக்கு அவர் அத்தான் முறை. கலைஞர் அவர்கள் அவரை அத்தான், அத்தான் என்றுதான் பாசத்தோடு அழைப்பார்கள். அதைப் பார்த்து நாங்கள் எல்லாம் அவரை `அத்தான் தாத்தா' என்று செல்லமாகக் கூப்பிடுவோம்.

திருவாரூரில் கலைஞருடைய பக்கத்து வீட்டில்தான் அவர்களுடைய குடும்பத்தினர் தங்கியிருந்தார்கள். அதே மாதிரி, கலைஞர் அவர்கள் சென்னைக்கு வந்து கோபாலபுரம் இல்லத்தில் குடியேறிய உடனே, கலைஞர் வீட்டுப் பக்கத்திலேயே அவர்களும் குடிவந்தார்கள். இந்தத் திருமணத்திற்கு வந்த பிறகு மணமேடையில் இருப்பவர்களை எல்லாம் பார்த்த பிறகு, எனக்குப் பழைய நினைவுகள் எல்லாம் என் ஞாபகத்திற்கு வந்தன.

### ஒன்றாக வளர்ந்தவர்கள்

நான் குழந்தையாக இருக்கும் பொழுது கோபாலபுரத்தில் கலைஞர் வீட்டிலே இருந்ததை விட, நம் `அத்தான் தாத்தா' வீட்டிலே இருந்ததுதான் அதிகம். அங்கேதான் நான் வளர்ந்தேன். இன்னும் சொல்லப்போனால், நம் அத்தான் தாத்தா அவர்கள், கண்ணன் மாமா, வள்ளி அத்தை அவர்கள்தான் என்னையும் என்னுடைய சகோதரிகள், அவர்களையெல்லாம் தூக்கி வளர்த்தது. கலைஞர் குடும்பத்தில் என் வயதை ஒத்திருப்பவர்கள் எல்லாரையும் தூக்கி வளர்த்தது அவர்கள்தான்.

மணப்பெண்ணின் தந்தை, அருமை நண்பர் தம்பிதுரை, அவரின் சகோதரர் வளவன், நான், எங்கள் வீட்டில் இருக்கக்கூடிய என் சகோதரர்கள், சகோதரிகள் எல்லாம் ஒன்றாக வளர்ந்தவர்கள். ஒன்றாகச் சாப்பிடுவோம். அங்கே இருக்கக்கூடிய தெருக்களில், கோபாலபுரத்தில் ஒன்றாக கிரிக்கெட் விளையாடியிருக்கிறோம்.

அவர்கள் வீட்டில் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், கலைஞர் குடும்பம் முதலில் அங்கே வந்து நிற்கும். அதே மாதிரி கலைஞர் அவர்களும், தயாளு பாட்டியும் முன்னின்று அவர்கள் இல்ல நிகழ்ச்சிகள் அத்தனையையும் நடத்தி வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி கலைஞர் அவர்களின் குடும்ப நிகழ்வுகளில் நம் கண்ணன் மாமாவும், வள்ளி அத்தையும், அவர்களுடைய குடும்பத்தினரும் எல்லோரும் ஒன்றாகப் பங்கேற்று இருக்கிறார்கள்.

### காதல் திருமணம்

இன்றைக்கு இந்தத் திருமணம் ஒரு சுயமரியாதைத் திருமணமாக நடந்துகொண்டிருக்கிறது. இன்னொரு கூடுதல் மகிழ்ச்சி, இங்கே வந்ததற்கு பிறகுதான் சொன்னார்கள், இது ஒரு காதல் திருமணம் என்று சொன்னார்கள். அதற்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமணம் என்றாலே, அதுவும் பொதுவாகக் காதல் திருமணம் என்றால் உங்களுக்குத் தெரியும். திருமணத்திற்கு முன்பு அப்பா, அம்மா ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அப்பா, அம்மா ஒப்புக் கொண்டார்கள் என்றால், சொந்தக்காரர்கள் யாராவது பிரச்சினைக்கு வருவார்கள். பெரியப்பா பிரச்சினை செய்வார்கள். இந்தப் பக்கம் பொண்ணு வீட்டில் ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்பி விடுவார்கள்.

பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு, இன்றைக்கு இந்த ஜோடி காதல் திருமணமாக இணைய இருக்கிறார்கள். இதன் பிறகு நீங்கள் இருவரும் சுயமரியாதையோடு, நல்ல நண்பர்களாக, அதேபோலக் காதலர்களாக எதையும் விட்டுக்கொடுக்காமல், விட்டுக்கொடுக்க வேண்டிய விஷயத்தை விட்டுக் கொடுத்து, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், உங்களுக்குள்ளே பேசித் தீர்த்துக்கொண்டு, நல்ல மணமக்களாக நீங்கள் இருவரும் சிறப்பாக உங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நம் தலைவர் அவர்கள் எந்தத் திருமணத்திற்குச் சென்றாலும், ஒரே ஒரு கோரிக்கையைத்தான் வைப்பார்கள்.

உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தை, ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அதற்கு அழகான ஒரு தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, மணமக்களை உங்கள் அத்தனை பேரின் சார்பாகவும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.கே.ரவி, வட்டச் செயலாளர்கள் வெங்கடேசன், முருகையன், ஆதிமாறன், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் பிரபு, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு, துணை அமைப்பாளர் தினேஷ், மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் இளவரசு, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சரத், டில்லி, சாகுல் ஹமீது உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

## கொங்கு மண்டலத்தின் பிரதானத் தொழிலான

# லாரி தொழிலின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்!

## கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சித் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் கோரிக்கை!

சென்னை, ஜூலை 7-

தமிழக அரசுக்கு வரிகளை முன் கூட்டியே செலுத்தி வருவாயை அதிகப்படுத்துகிற லாரி தொழிலின் பிரச்சினைகள் குறித்து போக்குவரத்து துறை அமைச்சர் சங்கங்களையும், அதிகாரிகளையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இந்தியாவிலேயே லாரி தொழிலுக்கு முன்னோடியாக இருக்கும் மாவட்டம் நாமக்கல். இன்று நாமக்கல், சங்ககிரி, திருச்செங்கோடு உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் லாரி தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டிருக்கிறார்கள். கொங்கு மண்டலத்தில் பிரதான தொழிலாகவே லாரி தொழில் இருந்து வருகிறது. குறிப்பாக நாமக்கல்லில் இந்தியாவில் இருந்து எந்த தொழிற்சாலைகளுக்கு பொருட்கள் ஏற்றி செல்ல வேண்டும் என்றாலும் அதற்கு உண்டான கனரக வாகனங்களின் பிரசித்தி பெற்ற இடமாக நாமக்கல் திகழ்கிறது. அதுமட்டுமின்றி தென்னிந்தியாவிற்கு சப்ளை செய்யப்படும் சமையல் கேஸ் வாகனங்கள் LPG லாரிகள் நிறைந்த பிரதான பகுதியாகவும் நாமக்கல் உள்ளது. இம்மாவட்டத்தை சேர்ந்த திருச்செங்கோடு ரிக் வாகனங்கள் அகில உலக அளவில் தன் ஆதிக்கத்தை செலுத்தும் சிறப்பு மிக்க பகுதியாகவும் உள்ளது. அதேபோல சேலம் மாவட்டம், சங்ககிரியில் பொருட்களை ஏற்றிச் செல்லும் டாரஸ் லாரிகள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. இதுபோல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் லாரி தொழிலை நம்பி பல லட்சக்கணக்கான குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இத்தொழிலை நம்பி அரசு வங்கிகள், அரசு உதவி பெறும் வங்கிகள், தனியார் நிதி நிறுவனங்கள் லாரிகள் மூலம் வருவாய் ஈட்டி வருகிறது. இவ்வளவு சிறப்பும், பலமும் கொண்ட லாரி தொழில் பிற தொழில்களை காட்டிலும் அரசுக்கு முன்கூட்டியே வரி செலுத்தி வருமானத்தை தருகிற நிலையில் இருக்கிறது. இத்தொழில் நன்றாக இருந்தால் தான் நடுத்தர ஏழை மக்கள் பயன்படுத்தும் அன்றாட பொருட்களின் விலையை கட்டுக்குள் கொண்டு வர இயலும். அதனால்தான் போக்குவரத்து துறைக்கு என்று தனியாக அமைச்சகம் செயல்படுகிறது.

லாரி தொழிலில் உதிரிபாகங்கள் விலை உயர்வு, வளைகுடா போரின் காரணமாக டீசல் விலை உயர்வு, ஆன்லைன் வரிவிதிப்பு, காலாவதியான சுங்கச்சாவடி, நடைமுறையில் உள்ள சுங்கச்சாவடி, ஜிபிஎஸ் (வாகன கண்காணிப்பு கருவி) கட்டாயம் பொருத்த வேண்டும் என்ற உத்தரவு, ஓட்டுனர்கள் பற்றாக்குறை போன்றவற்றால் லாரி தொழில் பாதிப்படைந்து இருக்கிறது. இதனைத் தாண்டி இன்றைய லாரி உரிமையாளர்களின் கோரிக்கையான FC மற்றும் புதிய வாகனங்கள் பதிவு செய்யும் RC உள்ளிட்ட ஆவணங்கள் தபால் வழியில் தருவதை தவிர்த்து முன்பு போல் நேரடியாக தர வேண்டும்என்ற கோரிக்கை இப்படி எத்தனையோ கோரிக்கைகளை லாரி உரிமையாளர்கள் வைத்துக் கொண்டிருக்க அவர்களுக்கும் அரசுக்கும் ஏதோ ஒரு இணைப்பு இல்லாமல் மாற்றான் தாய் பிள்ளைகள் போல் அரசு வருவாயை பெற்றுக்கொண்டு லாரி உரிமையாளர்களை கண்டுகொள்ளாத நிலையில் உள்ளது.

இதனைப் போக்க லாரி சங்கங்களுடன் போக்குவரத்து துறை அமைச்சர் இணக்கமான போக்கை கையாள வேண்டும். இப்பொழுது புதிதாக பொறுப்பேற்றுள்ள அதுவும் போக்குவரத்து நகரத்தின் மையப் பகுதியில் உள்ள போக்குவரத்து துறை அமைச்சர் தான் பொறுப்பேற்றதலிருந்து லாரி சங்கங்களை சந்திக்கவே இல்லை. சம்பந்தப்பட்ட லாரி தொழில் பிரச்சனைகளைப் பற்றி ஆய்வுக் கூட்டங்களை உடனே நடத்த வேண்டும். லாரி சங்கங்களையும், துறை அதிகாரிகளையும் அழைத்து கருத்துக்களைக் கேட்டு பிரச்சினைகளை தீர்க்க அமைச்சர் முயற்சிக்க வேண்டும். போக்குவரத்து துறை அமைச்சர் இதற்கு மேலும் தாமதிக்காமல் லாரி தொழிலை காப்பாற்ற முன்வர வேண்டும். லாரி போக்குவரத்தை நம்பி பல்வேறு துறை சார்ந்த தொழில்களும் இயங்குகின்ற காரணத்தால் ஏற்படுத்தும் தாமதம் மற்ற தொழில்களையும் பாதிக்கும். தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி தடைபட முக்கிய காரணமாக இது அமைந்து விடும். போக்குவரத்து துறை எந்த அளவிற்கு பயணிகள் பேருந்து மீது கவனம் செலுத்துகிறதோ அதை விட அதிகமான கவனத்தை லாரி போக்குவரத்தின் மீதும் செலுத்த வேண்டும். தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி தன் கையில் இருக்கிறது என்பதை உணர்ந்து போக்குவரத்து துறை அமைச்சர் துரிதமாக செயல்பட வேண்டும்.

இவ்வாறு ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## சென்னை மணவழகர் மன்றம் முத்தமிழ் விழா அறக்கட்டளை நடத்தும்

# மணவழகர் மன்றத்தின் 70 ஆம் ஆண்டு முத்தமிழ் விழா!

## தலைமை; மா.சுப்பிரமணியன் முன்னிலை; அரு.இல. சுந்தரேசன்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை!

சென்னை, ஜூலை 7 -

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் இணை வேந்தர் டாக்டர் எம்.ஏ. எம்.ராமசாமி அவர்களின் பேருதவியைக் கொண்டு இயங்கி வரும் மணவழகர் மன்றம் முத்தமிழ் விழா அறக்கட்டளை நடத்தும் மணவழகர் மன்றத்தின் 70 ஆம் ஆண்டு முத்தமிழ் விழா 10.7.2026 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் சென்னை தியாகராயர் நகர் ஜி.என்.செட்டி ரோடு, சர்.பி.டி. தியாகராயர் கலையரங்கத்தில் நடைபெறுகிறது என மணவழகர் மன்றத்தின் செயலாளர் கே.கன்னியப்பன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு மணவழகர் மன்றச் செயலாளர் கே.கன்னியப்பன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

மூத்த வழக்கறிஞர் அரு. இல.சுந்தரேசன் முன்னிலை வகிக்கிறார்.

விழாவில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தந்தை பெரியாரும் தமிழ் தென்றல் திரு.வி.க.வும் எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

மேலும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்று பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர்.

நிறைவாக மணவழகர் மன்றத்தின் துணைச் செயலாளர் சு.கருணாநிதி நன்றி கூறுகிறார்.

---

# மகாராஷ்டிரா - குஜராத் - அரியானா மாநிலங்களில் கனமழை!

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

மும்பை, ஜூலை 7 -

மகாராஷ்டிரா, குஜராத், அரியானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருவதால், அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் வந்தே பாரத் ரயில் சென்றபோது, தண்டவாளத்தில் தேங்கியிருந்த மழைநீர் அருகே இருந்த மேம்பாலத்தின் மீது அருவி போல் கொட்டிய காட்சிகள் வெளியாகியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. குறிப்பாக, மும்பையின் நலாசோபாரா பகுதியில் மழைநீர் தேங்கியுள்ளதால், அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பலத்த காற்றுடன் பெய்த மழை காரணமாக கிழக்கு பாந்த்ராவில் மரம் வேரோடு சாய்ந்து கார்கள் சேதமானது.

கோவாமும்பை தேசிய நெடுஞ்சாலையிலும் மழைநீர் தேங்கியது. புனேயில் மழை காரணமாக வீடு ஒன்று இடிந்து விழுந்ததில், இருவர் காயமடைந்தனர். மும்பையில் உள்ள கடற்பகுதிகளில் பலத்த காற்று வீசி வருவதால், கடல்சீற்றத்துடன் காணப்படுகிறது. இதனிடையே, கனமழையால் மும்பையில் உள்ள ரயில் தண்டவாளங்களிலும் தண்ணீர் தேங்கியுள்ளது.

இருப்பினும், வந்தே பாரத் ரயில் இயக்கப்பட்டபோது, தண்டவாளத்தில் தேங்கியிருந்த தண்ணீரை கிழித்துக் கொண்டு ரயில் சென்றநிலையில், தேங்கிய மழைநீர் அருகே இருந்த மேம்பாலத்தின் மீது அருவி போல் கொட்டியதால், வாகன ஓட்டிகள் அதிர்ச்சியடைந்தனர்.

இதேபோல், குஜராத் மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால், குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அரியானா மாநிலத்தின் குருகிராம் பகுதியில் மழை பெய்த நிலையில், அங்கும் தண்ணீர் தேங்கியுள்ளது. ஒடிசா மாநிலம் கட்டாக்கில் பலத்த மழை காரணமாக தண்ணீர் தேங்கியுள்ளதால், அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.